★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No QB/8945/78

மலர் 20 தை 17 ரபி-அவ் 1 இதழ் 351

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 30-1-79

UNIVERSITY ... PERIODICALS DIVISION

# ஈரான் சம்பவங்கள், இலங்கை அரசுக்கு ஒரு பாடமாகட்டும்!

### திருமதி பண்டாரநாயக்கா எச்சரிக்கை!

[கொழும்பு] "ஈரானில் இன்று நடைபெறும் வன்முறைச் சம்பவங்கள், இலங்கை அரசிற்கு ஒரு பாடமாக அமையட்டும்!" இவ்வாறு நேற்றுமுன்தினம் நுகேகொடையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரால் ஒழுங்குசெய்யப்பட்ட பிரச்சாரக் கூட்டத்தில் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "அரசு தேர்தல்காலத்தில் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளைப் பறக்கவிட்டு முதலாளிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்குமே வசதிசெய்து கொடுக்கிறது. தார்மீக ஆட்சி [6-ம் பக்கம் பார்க்க]

# குருநகர் வீடமைப்பு: மீண்டும் தடை உத்தரவு?

(யாழ்ப்பாணம்)

**குருநகர் வீடமைப்புத் திட்டத்துக்கு இப்பொழுது மீண்டும் தடை ஏற்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. ஜனாதிபதியின் சிபார்சின்மீது, இத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.**

குருநகர் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் மொத்தம் 48 வீடுகள் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. சுயவீடமைப்புத் திட்டத்தின் மூலமாக 38 வீடுகளும், வீடமைப்புத் திணைக்களத்தின் உதவியுடன் 10 வீடுகளும் இங்கு அமைத்துக் கொடுக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. இந்தப் பத்து வீடுகளுக்குமான ஆரம்ப வேலைகள் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் வீடமைப்புத் திட்டத்தை நிறுத்தி வைக்குமாறு ஜனாதிபதி சிபார்சு செய்திருப்பதாக அறியப்படுகிறது.

### முதலாவது தடை உத்தரவு

குருநகர் வீடமைப்புத் திட்டத்தை நிறுத்திவைக்குமாறு சில வாரங்களுக்கு முன்னர் தடைஉத்தரவு வந்தபோது இது சம்பந்தமாக யாழ்ப்பாணம் எம். பி திரு. வெ. யோகேஸ்வரன் கடுமையான ஆட்சேபம் தெரிவித்ததைத் தொடர்ந்து தடைஉத்தரவு நீக்கப்பட்டு, வீடமைப்பு வேலைகள் மீண்டும் நடைபெற்றன

யாழ், அரசாங்க அதிபரிடம் திரு யோகேஸ்வரன் முறையிட்டபோது குறிப்பிட்ட வீடமைப்புத் திட்டத்தில் இராணுவ முகாம் அமைக்கும் யோசனை எதுவும் கிடையாது என்றும் அரசாங்க ஊழியர்களுக்கான வீடுகளே அங்கு அமைக்கப்படவிருப்பதாகவும் இதனையும் குருநகர் மக்கள் எதிர்ப்பார்களானால் இத் திட்டமும் கைவிடப்பட்டு குருநகர் மக்களின் தேவையே முதலில் கவனிக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி சிபார்சு குருநகர் வீடமைப்புத் திட்டவேலைகளுக்கு மீண்டும் இப்பொழுது தடை ஏற்பட்டிருக்கும் பட்சத்தில் இங்கு அரசு ஊழியர்களுக்கான வீடுகளே அமைத்துக் கொடுக்கப்படலாம் எனத் தெரியவருகிறது.

# 'அதிவேகத்தைக் கட்டுப்படுத்துங்கள்'

### கார்ச் சாரதிகளுக்கு யாழ். பொலிசார் அறிவுரை

(யாழ்ப்பாணம்) டாக்சி சாரதிகளுக்கும் இதர வாடகைக் கார் சாரதிகளுக்கும் விபத்துத் தடுப்பு, வீதி ஒழுங்கு, வாடகைக் கூலி ஆகியவை பற்றிய வகுப்பொன்று யாழ் பொலிஸ்நிலைய மேல்மாடியில் நடைபெற்றது.

இவ் வகுப்பில் யாழ் பொலிஸ் அதிபர் திரு ஈ. எகொடப்பிட்டியா, உதவிப் பொலிஸ் அதிபர் திரு ஹேரத் போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. என். சேனாதிராஜா உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் சிசிரகுமார ஜெயசேகர மற்றும் பல அதிகாரிகளும் கலந்துகொண்டு வீதி ஒழுங்குமுறைகள் பற்றி விளக்கவுரை நிகழ்த்தினார்கள்.

இவ் வகுப்பில் சுமார் 100 வாடகைக் கார்ச் சாரதிகள் வரை பங்குபற்றினர்.

பொலிஸ் போக்குவரத்துப் பகுதி பொறுப்பதிகாரி திரு. என். சேனாதிராஜா பேசுகையில் "வாடகைக் கார்ச் சாரதிகள் காரைச் செலுத்தும்போது வீதி ஒழுங்குமுறைகளைக் கவனித்து அவதானமாக காரைச் செலுத்துவதன் மூலம், பல விபத்துக்களையும் மரணங்களையும் தவிர்க்க முடியும் காரைஓட்டும் சாரதிகள் சனநடமாட்டமுள்ள இடங்களில் வேகத்தை மிகவும் குறைத்து ஓட்டுவதன்மூலம் விபத்தைத் தவிர்க்கமுடியும் எமது சகோதர சகோதரிமார் மனைவி மக்கள் போன்ற உறவினர்கள் விபத்துக்குள்ளானால் நாம் எவ்வாறு வேதனை அடைவோம் என்பதை உணர்ந்தால் விபத்து ஏற்படாமல் நிதானமாக காரைச் செலுத்த வேண்டுமென்ற பொறுப்புணர்ச்சி உண்டாகும். மதுபோதையில் காரை 6-ம் பக்கம் பார்க்க

# மூதூர்த்தொகுதி பூராவும் மின்சாரம்

[மூதூர்] ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மூதூர் தொகுதி பூராவும் மின்சாரம் வழங்கப்படும் என்று மூதூர் எம். பி ஜனாப் எம் ஈ. எச். மஹ்றூப் கூறினார்.

மூதூர் ஐ தே கட்சி மத்திய கிளை மகாநாட்டு மண்டபத்தில் நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் தலைமையுரையாற்றுகையிலேயே மூதூர் எம். பியும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். ஈச் மஹ்றூப் மேற்கண்டவாறு கூறினார்.

மூதூர் எம் பி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: "மின்சாரம் மூதூர்த் தொகுதியைப் பொறுத்தமட்டில் மிக அவசியமாகும். சகல அபிவிருத்தி வேலைகளுக்கும் மின்சாரம் அவசியம் தேவை. எனவே தான் நான் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் வாதாடி மேற்படி ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இத் தொகுதி பூராவும் மின்சாரம் விநியோகிக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்துள்ளேன்,

அத்தோடு வெகுவிரைவில் மூதூர்-திருமலை 'அம்புலன்ஸ்' மோட்டார் படகுச் சேவை ஒன்றையும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன்.

வேதத்தீவு அணைக்கட்டையும் கூடிய விரைவில் சீரமைப்பதுடன் விவசாயிகளின் சகல தேவைகளையும் பூர்த்திசெய்து தருவேன் என்றார்.

# வலிப்பு வந்த பெண் தீக்குப் பலி!

[யாழ்ப்பாணம்] நீண்ட காலமாக வலிப்பு நோயால் பீடிக்கப்பட்ட ஒரு பெண் தீக்குப்பலியானார்.

பூநகரியைச் சேர்ந்த பொன்னம்பலம் நாகம்மாவுக்கு [வயது 55] நீண்டகாலமாக வலிப்பு நோய் இருந்து வந்தது. சம்பவ தினம் இரவு அவர் வீட்டில் தனியே இருந்து சமைத்துக் கொண்டிருந்த போது திடீரென வலிப்பு ஏற்பட்டதாகவும், அருகிலிருந்த நெருப்பு துணியில் பிடித்துக் கொண்டதாகவும், கடைக்கு சென்று திரும்பிய மகன் வந்து உதவியளித்ததாகவும், விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இரவு உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல வாகனவசதி எதுவும் இல்லாததினால், மறுநாள் யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு மரணமானார் என்றும் விசாரணையில் கூறப்பட்டது.

விசாரணை நடத்திய யாழ். மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார். [கை-அ]

# வீடு உடைத்துத் திருட்டு

(கோண்டாவில்) சுந்தர்மடம் மணற்றரை வீதியிலுள்ள ஒரு வீடு உடைத்துக் களவு நடைபெற்றுள்ளதாம்.

இவ்வீட்டின் பூட்டிய ஜன்னல் கதவை உடைத்து இக் களவு நடைபெற்றுள்ளதாகவும், வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் சூட்கேசில் இருந்த திறப்பை எடுத்து, அலுமாரியில் பூட்டிவைக்கப்பட்டிருந்த பொருட்களைத் திருடிச்சென்றுள்ளதாகவும் கூறப்பட்டது. விலைமதிப்புள்ள சிங்கப்பூர் கம்பளங்கள் மற்றும் விலை உயர்ந்த சேலைகள் முதலியனவும், 300 ரூபா ரொக்கப் பணமும் களவாடப்பட்டுள்ளதாம்

இதுபற்றி யாழ்ப்பாணப் பொலிசார் புலன்விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். [உ]

# கொழும்பு சட்டநூல்நிலையம் முன்பாக ஜி. ஜி. சிலை

(கொழும்பு) கொழும்பு சட்டநூல் நிலையத்தில் அமரர் ஜி. ஜி பொன்னம்பலத்தின் வெண்கலச் சிலையை அன்னாரின் நினைவு தினமான பெப்ரவரி 9-ம் திகதி திறந்து வைப்பதற்கான ஏற்பாட்டை செய்வதென அமரர் ஜி. ஜி. ஞாபகார்த்தகுழு தீர்மானித்துள்ளது:

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. தா. சிவசிதம்பரம்பிள்ளை தலைமையில் அவரது இல்லத்தில் நடந்த ஜி. ஜி. ஞாபகார்த்தகுழு கூட்டத்தில் கீழ்க்காணும் முடிவுகளும் எடுக்கப்பட்டன.

அன்றைய தினம், அமரர் ஜி. ஜி யின் உருவப்படங்களை அச்சிட்டு விநியோகிப்பது, யாழ் பொது நூலகத்தில் அமரர் ஜி. ஜி.யின் முழுஉருவத்தை கொண்ட வெண்கலச்சிலை அமைப்பதற்கான பீடத்தை கட்டுவதற்கு நிதி சேர்ப்பது.

சகல சமய ஆலயங்களிலும், விசேட பூசைகளும், வழிபாடுகளும், நடாத்த ஒழுங்கு செய்வது.

ஜி ஜி ஞாபகார்த்த குழுவின் அடுத்த கூட்டம் பெப்ரவரி 3-ம் திகதி நடைபெறும். (க)

# வடக்கில் ஈழப்பிரச்னை; இதுதவிர நாட்டில் பிரச்னைகளே இல்லை! --ஜனாதிபதி

[கொழும்பு] "உலக நாடுகளில் ஏராளமான பிரச்னைகள் உண்டு. இலங்கையைப் பொறுத்தவரை வடக்கில் மட்டும் ஈழப் பிரச்னைதான் உண்டு" வேறு பிரச்னைகள் இல்லை.

இவ்வாறு கிரமஓயா திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்துவைக்கும் வைபவம் தெளியத்தையில் நடைபெற்ற போது ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன குறிப்பிட்டார்,

"இன்று இலங்கை சுபிட்சத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது, இதற்கு சகல மக்களும் ஒத்துழைப்பு நல்கவேண்டும், முன்னைய அரசின் சீர்கேடுகள் இன்னும் ஓயவில்லை, இந்த நாட்டில் சட்டத்தைமீறி பொதுமக்களுக்கு ஊறுவிளைவிப்பவர்களை பொலிசார் ஒருபோதும் அனுமதி அளிக்கமாட்டார்கள்" என்றும் ஜனாதிபதி கூறினார். [ம]

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அரியாலை செம்மணி ஒழுங்கையில் 10 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்ளுங்கள்:- Dr. புஷ்பநாதன், கல்தோட்டை வீதி, பலாங்கொடை. 1448

புளியம் பொக்கணை குடியேற்றப்பகுதியில் பாடசாலைக்கு அருகாமையில் பத்து ஏக்கர் நெற்காணி விற்பனைக்குண்டு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1424, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் 1424

யாழ். மணிக்கூட்டு ஒழுங்கையில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: சி ஆறுமுகம், 5, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம். 148

### தேவை

பிரபல்யமான ஸ்தாபனத்துக்கு விற்பனையாளர் தேவை படிப்பு, உம்மைபற்றி உத்தரவாதமளிக்கக் கூடியவர் யார் போன்ற விபரங்களுடன் இருபாலாரும் 5-2-79 க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1460 C/o ஈழநாடு லிமிட். யாழ்ப்பாணம். 1460

திறமையாக வேலைசெய்யக் கூடிய மெசின்மைன்டர் தேவை. நேரில் வரவும் சித்திரா அச்சகம், 310, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம் 1477

திறமையாக வேலைசெய்யக் கூடிய மெசின்மைன்டர் தேவை. நேரில் வரவும் ஆர். எஸ். அச்சகம், 149, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் 1478

### WANTED

Agriculture / Farm school trained and / or experienced person with energy, discipline and enthusiasm to be in charge of a compect-coconut paddy and subsidiary - crop farm. Good salary and prospects. Apply with copies of testimonials and 2 refer rences. to Advt No: 1482, C/o Eelanadu Ltd, Jaffna. 1482

### அடைவு நகைகள் ஏல விற்பனவு விளம்பரம்

தொல்புரம் இ துரையப்பா அன் சன்ஸ் அடைவு கடையில் 27-12-75 தொடக்கம் 3-7-77வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகளை 27-2-79ல் செவ்வாய்க்கிழமை மு. ப. 8 மணி முதல் மேற்படி கடையில் வைத்து பகிரங்க ஏலத்தில் என்னால் விற்கப்படும்,

சி. செ. மாரிமுத்து,
நீதிமன்றங்களில் விற்பனை ஆணையாளரும், விலைமதிப்பாளரும், ஏலத்தாரரும்
விதானை வளவு,
ஒத்தன்கேணி,
27-1-1979. 1479


## ஜி. ஜி. சிலையை அமைச்சர் திறந்துவைப்பார்

[யாழ்ப்பாணம்]

குருநகரில், பெப்ரவரி 11ந் தேதி அமரர் ஜி ஜி பொன்னம்பலத்தின் உருவச்சிலையை போக்குவரத்து அமைச்சர் ஜனுப் எம். எச் முகமது திறந்துவைப்பார். [க-அ]


## பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்:

ஏழாலை, ஏழாலை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற பேரம்பலம் கனகசபாபதி என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தின் விடயத்தில்.

மரணமெய்தியவர்
ஏழாலை, ஏழாலை மேற்கைச் சேர்ந்த கனகசபாபதி கைம்பெண் மீனும்பிகை.

மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம்
இல. 30.

எதிராக

1. பாலசிங்கம் பத்மநாபனும் பெண்.
2. பத்மினியும் — ஏழாலை மேற்கு, ஏழாலை
3. கனகசபாபதி மகள் மைதிலி-ஏழாலை மேற்கு, ஏழாலை இவர் தன்னிலையற்றவராக விருப்பதால் தனது வழக்கிற்கான பாதுகாவலனாக நியமிக்கப் படவிருக்கும் 5-ம் எதிர்வாதி மூலம்.

பராயமற்றவர்

4. கனகசபாபதி நந்தகுமாரன்-ஏழாலைமேற்கு, ஏழாலை இவர் பராயமற்றவராக விருப்பதால் தனது வழக்கிற்கான பாதுகாவலனாக நியமிக்கப்படவிருக்கும் 5ம் எதிர்வாதிமூலம்.
5. பேரம்பலம் பத்மநாதன் ஏழாலை மேற்கு, ஏழாலை

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்க அதில் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1979ம் ஆண்டு பங்குனி மாதம் 9 ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்முனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி.

றி. ஜெயராசசிங்கம்
பதிவாளர்

1978-ம் ஆண்டு மார்கழி மாதம் 7 ஆந்நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

என்னால் எழுதப்பட்டது.

செ. இராமலிங்கம்.
மனுதாரரின் சட்டத்தரணி.
1455

## கேள்வி விளம்பரம்

### லொறிக்கு பொடி அடித்தல்

கட்டைவேலி-நெல்லியடி ப நோ. கூ. சங்கத்தின் புதிய இசுசு லொறிக்கு பொடிஅடிப்பதற்கான கேள்விகள் அனுபவம் வாய்ந்தவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விகள் யாவும் பதிவுத்தபால் மூலம் "தலைவர், கட்டைவேலி-நெல்லியடி ப நோ. கூ. சங்கம், கரவெட்டி" என்ற முகவரிக்கு 9-2-79ந் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். மற்றும் தேவையான விபரங்கட்கு சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பதில்பொதுமுகாமையாளர்
கரவெட்டி,
26 1-79. 1466

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


# சுதந்திர தினத்தைக் கொண்டாட தமிழ் மக்கள் உள்ளம் ஒருப்படுமா?

-- வவனியா 'சிவா'

[வவனியா]

"இலங்கை சுதந்திரமடைவதற்குச் சிங்களத் தலைவர்கள் மட்டுமல்ல, தமிழ்த் தலைவர்களும் அரும்பாடுபட்டார்கள். சுதந்திரம் அடைந்த நாள் முதல் இன்று வரை தமிழ்பேசுமினம் அடக்கி ஆளப்படுகிறது. இந்நிலையில் இலங்கையின் சுதந்திர தினத்தைக் கொண்டாடத் தமிழ் பேசும் மக்களின் உள்ளம் ஒருப்படுமா?"

இவ்வாறு வவனியாவில் நடைபெற்ற விவசாயப் பிரதிநிதிகளின் கருத்தரங்கில் உரையாற்றுகையில் வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"உயிருக்கு, உடலுக்குப் பாதுகாப்புச் சுதந்திரமில்லை. எமது பாரம்பரியத் தாயகத்தைப் பேணிப் பாதுகாக்க வழியில்லை, தகைமையிருந்தும் உயர் கல்வி கற்பதற்குத் தடை விதிக்கப்படுகின்றது கல்வித் தகைமை தகுதியடிப்படையில் அரசாங்கத்தில் சேவைபெற உரிமையில்லை. சட்டத்திலே அன்றி நடைமுறையில் தமிழ்மொழிக்கு ஏற்ற அந்தஸ்து இல்லை. இங்கு வாழமுடியாவிடினும், வெளிநாடுகளுக்குச் சென்று உழைத்து வாழ உதவியில்லை. தமிழ்ப் பிரதேசங்களின் இலாகாத் தலைவர்கள் அத்தனைபேரும் சிங்களப் பெருமக்கள். நீதி வழங்குகின்ற நீதிஸ்தலங்களிலே தமிழ்மொழியை விளங்கக்கூடிய நீதிபதிகள் இல்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொலிஸ், இராணுவ யதேச்சாதிகாரம், குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு ஏற்ற கல்வி நிலையங்கள் இல்லை. வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழ்கின்ற தமிழன் அஞ்சியஞ்சி வாழ்கின்றான். இந்நாட்டில் உணவை உற்பத்திசெய்கின்ற பாட்டாளி விவசாயிகளுக்கு அத்தியாவசியமான நீர்ப்பாசன வசதி, போக்குவரத்து வசதி, விளைவிக்கும் பொருட்களைச் சந்தைப்படுத்தும் வசதி செய்துகொடுப்பதற்கு எவருமில்லை.

"இத்தனையும் அனுபவித்து வாழ்கின்ற தமிழனைச் சட்டத்தினால், அதிகாரத்தினால் சுதந்திர தினத்தைக் கொண்டாடு என்று கூறுவது சர்வாதிகாரத்தை அப்பட்டமாக எடுத்துக்காட்டுகின்றது.

"பாரதத்திலே வடக்கு, தெற்கை நசுக்கி ஆளுகின்றது இலங்கையில் தெற்கு, வடக்கையும் கிழக்கையும் அடக்கி ஆளுகின்றது. இந்த இரு நாட்டின் ஆட்சித் தலைவர்களும் ஒருமித்துக் கொண்டாட இருக்கின்ற சுதந்திர தின விழா, எமது உண்மை நிலையை நன்றாக உணரவைக்கின்றது. உணர மறுப்பவர்களைச் சிந்திக்கத் தூண்டுகின்றது. [இ]



## நியமனம்

கைதடி திரு. ஆறுமுகம் கந்தையா சமாதான நீதவானாகவும் மரண விசாரணை அதிகாரியாகவும் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். உலக நாடுகளில் வாழும் சைவமக்களின் பேரன்பைப் பெற்ற இவர் கைதடி இலங்கைச் சைவ ஆநாதை இல்லத்தின் ஸ்தாபகராவர். இவர் தற்போதய பொதுச் செயலாளராகவும் நிர்வாகப் பணிப்பாளராகவும் பணிபுரிகின்றார். இவர் கைதடி இந்து வாலிபர் சங்கத்தலைவராகவும் அகில இலங்கை இந்துதமிழ் அறச்சாலைகள் ஒன்றியத்தின் துணைப்பொதுச் செயலாளராகவும் திருக்கேதீஸ்வர திருப்பணிச்சபையின் ஆயுட்கால உறுப்பினராகவும் பதவி வகித்து வருகிறார். கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் கைதடி நாவற்குழிக் கிராமசபைகளுக்குட்பட்ட பாடசாலைகளில் சமய ஆசிரியராகவும் பணிபுரிந்தவர். 1676-ம் ஆண்டு இலங்கை இந்து இளைஞர் பேரவை மாநாட்டில் இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்களால் "கருணைப்புரவலர்" என்ற பட்டமும் வெள்ளிப்பதக்கமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். நல்லை ஆதீன பரமாசாரிய சுவாமிகளாலும் "திருநெறித்தொண்டர்" என்றபட்டம் திருமுறைத் தெய்வீக மாநாட்டில் வழங்கப்பட்டது. இவர் ஒரு வர்த்தகருமாவர். (அ)

## கேரதீவு - சங்குப்பிட்டி பிரயாணம் சீராகும்

(கேரதீவு)

கேரதீவு சங்குப்பிட்டி பாதையில் இயங்கிவரும் வள்ளச் சேவையை சீர்திருத்தும் நோக்குடன் பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் புதிதாக 60 ஆயிரம் பெறுமதியான வள்ள இயந்திரமொன்றினைக் கொள்வனவு செய்துள்ளது.

இதனால்எதிர்வரும் 10ந் திகதி முதல் பொதுமக்கள் சிரமமின்றித்தங்கள் பிரயாணத்தை மேற்கொள்ளலாமென நம்பப்படுகிறது. (அ)

## மண்ணெண்ணை இன்றி விவசாயிகள் அவதி

(சுழிபுரம்)

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளைகளில் போதியளவு மண்எண்ணை விநியோகம் செய்யப்படாததால் மக்கள் குறிப்பாக விவசாயிகள் பெருமளவு கஷ்டம் அனுபவித்துவருகின்றனர்.

இப்பகுதியிலுள்ள கிளைச் சங்கங்கள் ஒரு வீட்டுக்கு ஒரு போத்தல் வீதம் விநியோகம் செய்துவருகின்றது. இதே வேளையில் விவசாயிகளின் வீட்டுக்கும் ஒரு போத்தல்தான் விநியோகம் செய்யப்படுகிறது இதனால் விவசாயிகள் தமது நீரிறைக்கும் இயந்திரத்திற்கு மண்ணெண்ணை இன்றி பெருங் கஷ்டம் அடைகின்றனர்.

விசேட ஏற்பாடு ஏதாவது செய்து விவசாயிகளுக்கு போதிய மண்ணெண்ணை கிடைக்க வழிசெய்ய வேண்டும் என்று சுழிபுரம் கிளை ஒன்று தலைமைச் சங்கத்தை வேண்டியுள்ளது.


## மரண அறிவித்தல்

### திருமதி இலங்கையர் சிதம்பரம்

திருமதி சிதம்பரம் காலமானார். இவர் சிங்கப்பூர் பென்சனியர் திரு அ இலங்கையர் அவர்களின் அன்பு மனைவியும் உருத்திரன், கணேசன் (ஆசிரியர் பதுளை) திருமதி நவமணி குணபாலசிங்கம். திருமதி இராசமணி இலங்கையர் (கண்டி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவர் பூதவுடல் அன்னாரின் இல்லத்திலிருந்து இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3-00 மணிக்கு ஈமக்கிரியைகளுக்காக கைதடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் கைதடி வடக்கு, கைதடி 1483


## மீலாத் கமிட்டி

[கொக்குவில்]

நபிகள்நாயகம் (ஸல்) பிறந்த தினத்தைக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகளை யாழ் முஸ்லிம் மீலாத கமிட்டியினர் செய்துவருகின்றனர்.

இக்கமிட்டியில் பின்வருவோர் அங்கம் வகிக்கின்றனர்: ஜனுப்கள் ஏ அப்துல்லா, மு செ அ முகமதராஜா ஜே பி, கே சாகுல்ஹமீது [ஆசிரியர்], எம் பி றவூப், எஸ் எம் சுல்தான், எம் எஸ் அப்துல்காதர், பி எம் மீரா சாகிபு, ரீ எம் சபீத், எம் எஸ் ஏ றசாக், எம் எஸ் எம் அப்துல்காதர், கே ருசிக், கே நிஜாம், எஸ் எம் அப்துல் கரீம், எம் சாகுல் ஹமீத். [அ]

## மருந்துகள் இல்லை

[சுழிபுரம்]

சுழிபுரம் கிராமசபை ஆயுள்வேதவைத்திய சாலையில் சகல மருந்து வகைகளும் முடிவடைந்து விட்டமையால் நோயாளர்கள் வைத்திய சாலைக்குவந்து வெறும் கையுடன் திரும்பிப்போக வேண்டிய நிலையில் உள்ளனர் வைத்தியசாலைக்குத் தேவையான மருந்து வகைகள் எப்போது வந்து சேரும் என்று எவருக்கும் தெரியவில்லையாம் இருபத்தைந்து வருடமாக திறமாக இயங்கி வந்த இவ் வைத்திய சாலையில் இவ்வாறான நிலைமை முன்பு ஒருபோதும் ஏற்படவில்லை என்றும் கூறப்படுகிறது. [இ]

(கண்டி)

பாரதப் பிரதமர் வருகையை முன்னிட்டு கண்டி கம்பளைப்பகுதிகளில் விசேஷ பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

பெருமளவில் பொலிசாரும் இராணுவத்தினரும் இதில் பயன் படுத்தப்பட்டுகின்றனர். இவர்கள் தங்குவதற்காக இப்பகுதிகளில் சில பாடசாலைகள் 1-ம் 2-ம் திகதிகளில் மூடப்படவிருப்பதாகத் தெரிகின்றது.

குடியரசு தினக்கொண்டாட்டங்களையும் பாரதப் பிரதமரின் வருகையையும் முன்னிட்டு நகர் புதுபொலிவு பெற்றுள்ளது. (உ)

# அப்போதிக்கரி பயிற்சிநெறி மீண்டும் வருகிறது

## யாழ். பல்கலைக்கழகத்தில் அடுத்தமாதம் ஆரம்பம்

(கொக்குவில்)

''கடந்த பல வருடங்களாக நிறுத்திவைக்கப்பட்ட அப்போதிக்கரிப் பயிற்சிநெறிமீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது. இப்பயிற்சிநெறி அடுத்த மாதம் முதல் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளது. இப்பயிற்சிநெறியில் முதலில் 35 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்''

இத்தகவலை யாழ்ப்பாணம் பல்கலைக் கழக உபவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் தெரிவித்தார். யாழ். இலக்கிய வட்டம் தமக்களித்த தேநீர் விருந்திலும் பாராட்டு விழாவிலும் பங்குபற்றி நன்றி தெரிவித்துப் பேசுகையிலேயே கலாநிதிவித்தியானந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

இப்பாராட்டு விழாவும் தேநீர் விருந்தும் யாழ். இலக்கிய வட்டத்தலைவர் கலைப்பேரரசு ஏ. ரி பொன்னுத்துரை தலைமையில் கடந்த சனிக்கிழமை சுபாஸ் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

கலாநிதி வித்தியானந்தன் தமது பேச்சில் மேலும் குறிப்பிட்டதாவது:

'ஆங்கில நாகரிகம் தலைசிறந்து விளங்கிய காலகட்டத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பல்கலைக் கழகத்தில் நான் கற்க முற்பட்டபோது ஆங்கிலத்தை அல்லது லத்தினைத்தான் கற்கவேண்டும் என்று எல்லோரும் வற்புறுத்தினர். இல்லாவிட்டால் எனது தந்தையின் தொழிலுக்குப படிக்கும்படியும் வற்புறுத்தினர். இவற்றை எல்லாம் எதிர்த்துத் தமிழைக் கற்றேன். பேராசிரிய கணபதிப்பிள்ளை அவர்களின் உதவியால் தான் தமிழ்கற்க முடிந்தது.

''இளம் வயதிலேயே பல எதிர்ப்புகளைக் கண்டவன் நான். நாட்டுக் கூத்தின் மகிமை குன்றிப்போய் இருந்த காலத்தில் அதற்குப் புத்துயிர் ஊட்டமுற்பட்டபோது அண்ணாவிமார் என்னை எதிர்த்தனர். தமிழாராய்ச்சி மகாநாடு நடத்த முற்பட்டபோது அரசு எதிர்த்தது. பேராசிரியராக வந்தபோதும் எதிர்ப்பு இத்தனை எதிர்ப்புகளுக்கும் மத்தியில் எதிர்நீச்சல் அடித்துத் துணிச்சலுடன் முன்னுக்கு வந்தநான், எதுவித எதிர்ப்புமின்றி, நான் தேடிப்போகாமலே என்னை நாடிவந்த உபவேந்தர் பதவியினால் இன்று அஞ்சுகின்றேன்.

### யாழ்ப்பாணத்தில் அப்போதிக்கரிப் பாடநெறி

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் வெகுவிரைவில் 35 மாணவர்கள் அப்போதிக்கரிப் பாடநெறியில் சேர்க்கப்படவுள்ளனர். அடுத்து விவசாய பீடம் கல்வித்துறை ஆகியவைகளையும் அமைக்க ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை பேசுகையில், 'உபவேந்தர் பேராசிரியர் வித்தியானந்தன் கண்டி சைவமகா சபைத் தலைவராக இருந்த காலத்தில் அதன் செயலாள

[5ம் பக்கம் பார்க்க]

## ஆத்திரம் இன்னும் தீரவில்லையே! ஜீ. ஜீ. (ஜுனியர்)க்கு பண்டிதர் பதில்

ஈழநாடு 27-1-79 ஆம் திகதி திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜுனியர்) டிசம்பர் மாதம் 20ந் திகதி என்னுடன்தான் தொலைபேசியில் உரையாடுகையில் நான் கூறியவற்றைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். முன் எப்பொழுதேனும் என்னுடன் தொலைபேசியில் பேசாதவர் அன்று காலை 8-00மணியளவில் என்ன காரணத்திற்காக பேசினார் என்பதையும் அவர் வெளியிட்டிருந்தால் நான் இதனை எழுதி அனுப்பத்தேவையில்லை. அவர் எனக்கு உண்டாக்கிய வாய்ப்பைப் பயன்படுத்தி அன்று அவர் என்னுடன் உரையாடும் பொழுது கூறியவற்றில் சில வற்றை இங்கு குறிப்பிடுகிறேன்.

இருத்தல் பீடிப்புகையிலை எடுத்துக்கொடுத்திருக்கிறார். ஜுனியர் ஜி ஜி பொன்னம்பலம் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்கடிக்கப்பட்ட ஒருவர். இவ்வாறு தேர்தலில் தோற்கடிக்கப்பட்டவர்கள் எல்லோருக்குமே பீடிப்புகையிலை கொடுத்தால் எத்தனையோ பேருக்குக் கொடுக்கவேண்டியிருக்கும்? ஒரு தனி நபர் - ஐக்கிய தேசியக்கட்சியிலில்லாதவர்-பாராளுமன்ற உறுப்பினராக இல்லாத ஒருவரானதனி நபரின் சிபார்சிலே இது கொடுக்கப்பட்டிருக்கிறது.

தவிசாளர் அவர்களே, உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ எனக்குத் தெரியாது. ஒரு இருத்தல் பீடிப்புகையிலையை ரூபா 16-50 அல்லது முடியாத நிலையிலுள்ளதென்றும் ஆத்திரத்தில்பலவற்றைக் கக்கினார். எங்கள் கட்சியைப் பற்றியோ நாங்கள் செய்ய

[5-ம் பக்கம் பார்க்க]

## மக்கள் கருத்து

நான் பீடிப்புகையிலை பங்கீடு செய்வதில் இடம்பெற்றுள்ள ஊழல்களை 19-12-78ந் திகதி பாராளுமன்றத்தில் பகிரங்கப் படுத்தினேன் திரு ஜுனியர் ஜி ஜி பொன்னம்பலத்தின் சிபார்சில் கொடுக்கப்பட்ட பீடிப்புகையிலையை பற்றியும் பின்வருமாறு குறிப்பிட்டேன்.

''ஆறு ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர்கள் ஏறக்குறைய 36,000 இருத்தல் பீடிப்புகையிலையை பெற்றிருக்கிறார்கள். வேறொருவர் ஜுனியர் பொன்னம்பலம்-ஆறு பேருக்கு 19200 ரூபா 17-50க்குக் கூட்டுத்தாபனத்திடமிருந்து வாங்கி வெளியில் அதை இருத்தல் 25 அல்லது 26க்கு விற்கலாம். இந்த புகையிலை அனுமதிப்பத்திரத்தை யாரிடமாவது கொடுத்தால் கூட ஒரு இருத்தலுக்கு 10 ரூபா பெறலாம்.''


[ஹான்சாட் 19-12-78]

இந்தப் பேச்சின் அறிக்கை 'சண்' பத்திரிகையில் பிழையாக [ஜுனியர்] திரு ஜி ஜி பொன்னம்பலத்தை பாதிக்கத் தக்கமுறையில் வெளிவந்தது வீரகேசரி முதலிய பத்திரிகைகளிலும் வெளிவந்தது. இவற்றைப் படித்துஆத்திரம்கொண்டவராகி; திரு ஜுனியர் பொன்னம்பலம் என்னுடன் தொலைபேசியில் பேசினார். நான் பீடிப்புகையிலைபங்கீடு பற்றிக் கேட்ட கேள்விக்கு எனக்குப் பாராளுமன்றத்தில் மறுமொழி கொடுக்கமுன்னரே அந்த மறுமொழி தமக்குத் தெரியுமென்றும்தமிழ்ஈழத்துக்குப் போராடும் நீங்கள் கோட்டாக்கள் முதலியன பற்றி ஏன் விசாரிக்க வேண்டுமென்றும் வேறுபலவற்றையும் அவர்கூறினார். உங்கள்கட்சிஇப்பொழுது யாழ்ப்பாணத்தில் செல்வாக்கிழந்துவிட்டது. செயற்குழுக் கூட்டத்தைக்கூட நடாத்த

அதாவது தமிழ்ப் பகுதிகளில் உள்ளவர்களுக்குக் கொழும்பிலுள்ள திணைக்களங்கள் அமைச்சுக்களிலிருந்து சிங்களத்தில் கடிதங்கள் வருவதும், இப்பகுதிகளிலிருந்து தமிழில் எழுதப்படும் கடிதங்களுக்குப் பதில் கிடைக்காமலிருப்பதும் போன்ற சிக்கல்கள் மாவட்ட மந்திரிசபைகள் இயங்குவதன் மூலம் நீங்கி விடுமென்றும் நம்பலாம்.

மாவட்ட மந்திரிசபைகள் அல்லது அபிவிருத்திச்சபைகள் பலவிதத்திலும் நன்மை அளிக்குமென்று எதிர்பார்க்கலாம்.

## மகாத்மாவின் மணிவாக்கு



இன்று காந்திஜி நினைவுதினம்

ஒருமீனினால் சமுத்திரத்தின் ஆழத்தை எவ்வாறு அளந்தறியமுடியாதோ, அவ்வாறு உலகத்துக்குட்பட்ட ஒருவரால் பிரபஞ்சத்தை விளங்கிக் சொள்ளமுடியாது

0 0

எவரொருவருடைய சாவும் அவருக்கு வருத்தம் துன்பங்களிலிருந்து விடுதலையைக் கொடுக்கவில்லையா? அப்படியானால் சாவரும்போது ஏன் அழவேண்டும்?

0 0

வாழ்க்கைக்கு ஓர் இலட்சியத்தை வைத்துக்கொள்வது ஒரு காரியம். இலட்சியத்தின்படி வாழ்வது இன்னொரு காரியம் ஓர் இலட்சியத்தைக் கடைபபிடியாது வாழ்பவன் சுக்கானில்லாத கப்பலுக்கு நிகரானவரே. இலட்சியத்தை அடைவதற்கு விடாமுயற்சி செய்தால் மாத்திரம் நாம் இலட்சியமுடையோமெனலாம்.

ஃ ஃ

எவனொருவன் கடவுள் உண்டென்பதில் ஐயுறுகிறானோ அவன் அழிகிறான் கடவுளில்லை யென்பவன் தன்னையே இல்லையென்கிறான்.

---

# ஈழநாடு

The Eelanaadu

## மாவட்ட மந்திரி சபைகள்

மாவட்டங்கள் தோறும் உள்ள மக்கள் தமது தேவைகள் அனைத்தையும் அந்தந்த மாவட்டங்களிலேயே செய்துகொள்ளக்கூடிய வகையில் சகல மாவட்டங்களிலும் குட்டி மந்திரிசபைகள் விரைவில் அமைக்கப்படுமென்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன அக்குரஸ்ஸவில் நடைபெற்ற வைபவமொன்றில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

மாவட்ட அமைச்சர்களின் கீழ் இந்தக் குட்டி மந்திரிசபைகள் இயங்கும். அரசாங்க அதிபர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் யாவரும் இச்சபைகளுக்குட்பட்டே செயல்படுவார்கள். இந்தக் குட்டி மந்திரிசபையில் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த எம். பி.க்களும், உள்ளூராட்சித் தேர்தல் மூலம் தெரிவாகும் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களும் அங்கம் வகிப்பர்.

இவற்றை மாவட்ட மந்திரிசபைகள் என்று அழைத்தாலென்ன, குட்டி மந்திரி சபைகள் என அழைத்தாலென்ன, மாவட்ட அபிவிருத்திச் சபைகள் என்று அழைத்தாலென்ன. பெயர்களில் எதுவும் தங்கியிருப்பதில்லை. செயலில்தான் அவை மதிப்பையும், அந்தஸ்தையும் பெறுகின்றன.

இப்போதுள்ள நிர்வாக அமைப்பு முறைகளின்படி எந்தவொரு அலுவலையும் நிறைவேற்றுவதற்குக் கொழும்பிலுள்ள அலுவலகங்களுடனும், அமைச்சுக்களுடனுமே தொடர்பு கொள்ள வேண்டியுள்ளது.

இதனால் காலதாமதமேற்படுவதுடன், பொதுமக்களுக்கு வீண் கஷ்டநஷ்டங்கள் ஏற்படுவதுடன், நாட்டின் அபிவிருத்தியும் தடைப்படுகின்றது.

ஒரு மாவட்டத்திலுள்ள பிரச்னைகள், தேவைகள் எல்லா மாவட்டங்களுக்கும் பொருந்துவதில்லை. வெவ்வேறு மாவட்டங்களுக்கு வெவ்வேறு பிரச்னைகளும் தேவைகளும் இருக்கின்றன.

உதாரணமாக மரம் நடும் இயக்கம் ஆரம்பிக்கும் காலம் கொழும்பில் நிர்ணயிக்கப்படுகிறது. நாடு முழுவதும் மரம் நடும் இயக்கம் ஆரம்பிப்பதற்கான தேதி நிர்ணயிக்கப்பட்டு, சகல பகுதிகளுக்கும் சுற்றுநிருபம் அனுப்பப்படுகிறது. ஆனால் எல்லா மாவட்டங்களிலும் ஒரே மாதிரியான காலநிலை இருப்பதில்லை. கொழும்பில் நிர்ணயிக்கப்படும் காலத்தில் வடக்கிலோ கிழக்கிலோ மரம் நட்டால் அவை விரைவில் காய்ந்து கருகிவிடும்.

இதேபோல்தான் இதர பிரச்னைகளும், தேவைகளும் இருக்கின்றன.

ஏனைய மாவட்டங்களின் தேவைகளையும், பிரச்னைகளையும் அறிந்து, அவற்றை நிறைவேற்றுவதற்கு அதிகாரமுள்ள சபைகளோ, குட்டி மந்திரிசபைகளோ உருவாக்கப்படுமானால் பல பிரச்னைகள் சுமுகமாகத் தீர்க்கப்பட்டு, நாடும் துரிதமாக முன்னேறுவதற்கு வழிபிறக்கும்.

மாவட்ட ரீதியில் தேவைகளை நிறைவேற்றுவதற்கும், பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும் எடுக்கப்படும் நடவடிக்கைகளினால் மற்றொரு பெரிய சிக்கலான பிரச்னையும் சுமுகமாகத் தீர்வதற்கு வழி பிறக்குமென்று எதிர்பார்க்கலாம்.

---

# நாடு நடப்பு

முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் கொழும்பில் நடைபெறவிருக்கும் ஒரு திருமண வைபவத்தில் கலந்து கொள்வதற்காக அடுத்த மாதம் நான்காம் தேதி கொழும்புக்கு வருகிறார் எட்டாம் தேதி வரை இலங்கையில் தங்கியிருப்பார். யாழ்ப்பாணத்துக்கு வருவதற்கும் அவர் விருப்பம் கொண்டுள்ளார். யாராவது அவரை இங்கு சொற்பொழிவாற்றுவதற்கு அழைத்தால் அவர் வருவதற்குத் தயாராம்!

0 0 0

யாழ்ப்பாணம் கொக்குவிலில் தொழில் நுட்பக் கல்லூரியில் ஆண்களும் பெண்களுமாகப் பலர் படிக்கின்றனர். மாலைநேர வகுப்புக்கள் இரவு ஏழரை எட்டு மணிவரை நடைபெறுகின்றன. வகுப்புக்கள் முடிந்தபின் சிலர் நடந்து செல்கின்றனர். வேறு சில ஆண்கள் சைக்கிள்களில் செல்கின்றனர். மற்றும் சில ஆண்களும் பெண்களும் பஸ்ஸுக்காகக் காத்து நிற்கின்றனர்

கல்லூரி வாசலுடனுள்ள பஸ்தரிப்பு நிலையத்தில் வெளிச்சம் இல்லாதது மட்டுமல்ல கல்லூரி வாசலில் ஒரு மின் விளக்கு மட்டும் ஒளி கொடுக்கிறது. கல்லூரியின் இருபக்கமும் சுமார் கால் மைல் தூரத்துக்குப் போதிய வெளிச்சமில்லாமல் இருள் சூழ்ந்து கிடக்கிறது. தொழில் நுட்பக் கல்லூரிக்கு எதிரே ஒரு சிறு ஒலிங்கை. அதன் முகப்பில் ஒரு புளியமரம். அதை அடுத்துள்ள காணியில் பல்கலைக் கழகத்துக்கென ஒரு கட்டிடமும் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தப்பகுதி முழுவதும் இருள்தான்.

ஆண்களும் பெண்களும் படிக்கும் இத் தொழில் நுட்பக் கல்லூரிப் பகுதி பட்டப் பகல்போல் இரவிலும் ஒளி கொடுக்கவேண்டியது அவசியமில்லையா?

0 0 0

யாழ்நகரில் வீதிகள் பலவற்றிலும் வீதிகள், ஒழுங்கைகள், முகப்புக்களிலும் குப்பைகள் குவிக்கப்படுகின்றன. குப்பைகளை மாநகரசபை ஊழியர்கள் அகற்றிய பின்னும் அந்த இடங்களில் மண்புட்டிகள் ஏற்பட்டு வளர்ந்து விடுகின்றன. இதேபோல் கழிவு நீர் ஓடும் கால்வாய்கள் சுத்தம் செய்யப்படும்போது வெளியே எடுத்துப் போடப்படும் குப்பை கூழங்களுடன் மண்ணும் சேர்ந்து கான்களின் அருகே மண் மேடுகளும் உருவாகின்றன. இந்தமண் மீண்டும் கான்களுக்குள்ளேயே போய்ச் சேருகின்றது.

இப்போது இந்த மண் மேடுகளையும், மண்புட்டிகளையும் அகற்றுவதில் மாநகரசபை ஈடுபட்டுள்ளது. இவை அகற்றப்படும்போது ஏதோ வீதிகள் விஸ்தரிக்கப்பட்டவை போல் காட்சியளிக்கின்றன! சபாஷ் யாழ். மாநகர சபை!

0 0 0

இந்தியாவின் புகழ்பெற்ற சர்க்கஸ் கம்பனி விரைவில் இலங்கைக்கு வரவிருக்கிறது. இந்த சர்க்கஸ் கம்பனியை யாழ்ப்பாணத்துக்கும் அழைப்பதற்கு யாழ் மாவட்ட அரசாங்க அதியர் திரு லயனல் பெர்ணன்டோ ஈடுபட்டுள்ளார். கலை, கலாசாரப் பிரியரான அவரது முயற்சி நிச்சயம் வெற்றியளிக்கும். பல வருடங்களுக்கு முன் இந்தியாவிலிருந்து புகழ்பெற்ற கமலா சர்க்கஸ் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தது. இந்த கமலா சர்க்கஸ்தான் 'சந்திரலேகா' படத்திலும் காட்சியளித்தது. கமலா சர்க்கஸுக்குப் பின்னர் இப்போதுதான் இந்தியாவின் புகழ்பெற்ற மற்றொரு சர்க்கஸ் கம்பனி வரவிருக்கிறது.

-- ஊர்சுற்றி

# ஈரானில் ஒரு தனிநாடு?

## வடமேற்கில் அமைக்க முயற்சி

தெஹ்ரான், ஜன. 29 ஈரானின் வடமேற்குப் பகுதியில் 'தனிநாடு' ஒன்றை அமைக்க குர்திஸ்தான் இன மக்கள் முயற்சி எடுத்துவருகின்றனர் என இராணுவத் தளபதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஈரானின் வடமேற்குப் பகுதியில் துருக்கி சோவியத் யூனியன் எல்லைக்கருகிலேயே தனி நாட்டை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

'குர்திஸ்தான் ஐக்கிய மன்றம்' என்ற பெயரில் அப்பகுதியில் இயங்கி வரும் இயக்கமே இந்நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் இப்பகுதி மக்கள் முன்னர் மன்னர் ஷாவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தனர் என்றும் அவர் தெரிவித்தார். (இ)

## இ. போ. ச. ஊழியருக்கு எச்சரிக்கை!

(நெல்லியடி)

இ போ ச வில் பணிபுரியும் ஊழியர்கள் கடமை நேரத்தில் மதுபோதையில் காணப்பட்டால் அவர்கள் மீது தற்காலிக வேலைநீக்கம்போன்ற உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை மத்திய போக்குவரத்து சபை சகல பிராந்தியங்களிலும் உள்ள இ போ ச டிப்போக்களுக்கும் அனுப்பிவைத்துள்ள சுற்று நிருபமொன்றில் பணித்துள்ளது.

இச்சுற்றுநிருபத்தில் உயர் அதிகாரிகளுக்கு பணியாமை, கடமையை உதாசீனம் செய்தல், கடமைநேரத்தில் வீண் வம்பு வளர்த்தல், உரிய அதிகாரிகளை இம்சைப்படுத்தல் அல்லது அதற்கு முயற்சி செய்தல் ஆகியனவும் பாரதூரமான குற்றங்களாகுமெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## அமெரிக்காவில் சீன உதவிப் பிரதமர்

வாஷிங்டன், ஜன 29 அமெரிக்காவில் எட்டுநாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள சீன சிரேஷ்ட உதவிப் பிரதமர் திரு. டெங் சியாவோ பெங் இன்று அமெரிக்க அதிபர் திரு ஜிம்மி கார்ட்டருடன் பேச்சுநடத்துவார்.

வரலாற்றில் சீனத் தலைவர் ஒருவர் அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருப்பது இதுதான் முதல் தடவையாகும். (இ)

## தமிழர் உரிமைகளை வற்புறுத்தும் தபால் அட்டை இயக்கம்

[கொக்குவில்]

தமிழ்மக்களின் உரிமைகளை வற்புறுத்தும் தபால் அட்டை இயக்கம் ஒன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இவ்வியக்கம் எதுவித கட்சிச் சார்புமற்ற ஒரு இயக்கமாகத் தமிழ்மக்களின் உரிமைகளை வழங்கும்படி ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை தபாலட்டை மூலம் வற்புறுத்தும் ஓர் இயக்கமாகவே இது இருக்குமென்று செந்தமிழர் இயக்கச் செயலாளர் திரு வி. பொன்னம்பலம் தெரிவித்தார்.

திங்கட்கிழமை முதல் இவ்வியக்கத்தைச் சேர்ந்தவர்கள் தபாலட்டைகளை விற்பனை செய்கிறார்கள்.

தமிழ்மக்கள் வேலைசெய்யும் அரசாங்க, தனியார்துறை வேலைத்தலங்கள், பாடசாலைகள், தமிழ்மக்கள் கூடும் பொது இடங்கள், பஸ்நிலையம், புகையிரதநிலையங்கள் ஆகியவற்றில் இவ்வியக்கத்தின் தொண்டர்கள் தபால் அட்டைகளை விற்பனைசெய்வர்.

இவர்களால் விற்பனைசெய்யப்படும் இத்தபாலட்டையில்,

பல்கலைக்கழக பிரவேசத்தில் தரப்படுத்தலை நீக்கித் திறமைக்கு முதலிடம் வழங்க வேண்டும்—

வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு போன்ற பொருட்களை இறக்குமதிசெய்வதைத் தடைசெய்யவேண்டும்—

தமிழினத்தைத் தேசிய இனமாகக் கருதி, அவர்களின் பிரச்சினைகளைச் சுமுகமான முறையில் அணுகித் தீர்த்து வைக்கவேண்டும்—

பாராளுமன்றத்திலுள்ள அரசாங்கக் கட்சிப் பெருந்தலைவர்களின் இனத்துவேஷப் பேச்சைக் கைவிடச்செய்ய வேண்டும்—

தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள பாதுகாப்புப் படையினரின் அட்டூழியங்களைத் தடைசெய்யவேண்டும்—

இவை போன்ற கோரிக்கைகள் அடங்கிய வாசகங்களை கொண்டதாக இத்தபாலட்டைகளில் பொறிக்கப்பட்டிருக்கும்.

தொண்டர்களால் விற்பனை செய்யப்படும் தபாலட்டைகளை வாங்குவோர், அத்தபாலட்டையில் தங்களது முகவரியை எழுதி, ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு அனுப்பவேண்டுமென்று திரு வி. பொன்னம்பலம் தெரிவித்தார்.

## ஈரானில் மீண்டும் கலவரம்; 22 பேர் சுட்டுக் கொலை

தெஹ்ரான், ஜன. 29 ஈரான் தலைநகரில் அரசுத் துருப்புக்களுக்கும் ஆர்ப்பாட்டக்காரருக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் 22 பேர் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது. ஈரான் பிரதமர் டாக்டர் பக்தியாரைக் கொலை செய்யவேண்டும் என்றுகோஷித்த வண்ணம் ஆர்ப்பாட்டக்காரர்கள் இராணுவ பொலிஸ் தலைமைக் காரியாலயத்தைத் தாக்கியபோதே இராணுவத்தினர் ஆர்ப்பாட்டக்காரர் கும்பல்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இச்சம்பவத்தில் 100 கும் அதிகமானோர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளையில் பாரிஸில் தங்கியிருக்கும் சமயத் தலைவர் அயத்தொல்லா கொம்மேனியைச் சந்திப்பதற்காக பிரதமர் டாக்டர் பக்தியார் பிரான்சுக்கு செல்கிறார்.

டாக்டர் பக்தியார் தமது பதவியை ராஜினமாச் செய்தாலன்றி சமயத் தலைவர் பிரதமருடன் பேச்சுநடத்தமாட்டார் என அயத்தொல்லா கொமேனியின் ஆதரவாளர் தெரிவித்துள்ளார்கள். (இ)

# இஸ்ரேலில்குண்டு வெடிப்பு5பேர்பலி!

## பாலஸ்தீனர்கள் பழிவாங்கல்?

ஜெருஸலம், ஜன. 29 இஸ்ரேலிய சுற்றுலா விடுதி ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச்சம்பவம் ஒன்றில் 5 பேர் பலியானார்கள் என்றும் பலர் காயமடைந்தனர் என்றும் பாலஸ்தீன விடுதலை இயக்கம் தெரிவித்துள்ளது.

இக்குண்டு வெடிப்புக்கு தாமே காரணம் என்று கடந்த வாரம் படுகொலை செய்யப்பட்ட பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஜுனப் அபு ஹஸனின் தலைமையில் இயங்கிய வீரர்கள் குழு தெரிவித்துள்ளது

இக்குண்டு வெடிபினால் பலகார்கள் முற்றாகச் சேதமடைந்தன என்றும் இதனால் ஏற்பட்ட தீயை அணைக்க தீயணைப்புப் படையினர் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## பாடசாலை போகும்படி தாயார் ஏசினாராம் இளைஞன் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

பாடசாலைக்குச் செல்ல மறுத்த இளைஞர் ஒருவரை தாய் ஏசியதை அடுத்து அந்த இளைஞர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்துகொண்டார்

கோண்டாவிலைச் சேர்ந்த ஜெயதீஸ்வரன் (வயது 18) என்ற இளைஞரே தற்கொலை செய்துகொண்டவராவார்.

கிருமிநாசினி அருந்திய இந்த இளைஞர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமானார்.

மரணவிசாரணை நடத்திய திரு எஸ். எஸ். பிரான்சிஸ் தற்கொலைஎனத் தீர்ப்பளித்தார். (கை-இ)

## உபதலைவர் விடுதலை!

கராச்சி, ஜன 29 பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ஜுனப் சுல்பிகார் அலிபூட்டோவின் மக்கள் கட்சி உதவித்தலைவர் 12 ஆண்டு சிறைவாசத்தின்பின் விடுதலை செய்யப்பட்டார்.

இவர் சட்டவிரோதமாகவே 12 ஆண்டுகளும் சிறைவைக்கப்பட்டிருந்தார் என்று உயர் நீதிமன்றம் தெரிவித்தது. (இ)

## "பிறமதங்களையும் மதித்த பெருந்தகை"

### விபுலானந்தருக்குப் புகழ்மாலை

[பண்டத்தரிப்பு]

"விபுலானந்த அடிகளார் தமிழிசையை ஆராய்ந்து, யாழ். நூலைத்தந்து தமிழ் பேசும் நல்லுலகம் எங்கும் புகழ்பரப்பிய பெருமகனுவர். அவர் மொழி, மத விஷயங்களில் மிகவும் பரந்த மனப்பான்மையுடன் செயல்பட்டார். தமிழிலும் சைவசமயத்திலும் அவருக்கு ஈடுபாடு அதிகமிருந்தபோதிலும் பிறமொழிகளையும், பிறமதங்களையும் மதித்துக்கௌரவிக்கும் பண்புள்ளவராக விளங்கி வந்ததை நான் அவதானித்துள்ளேன். இத்தகைய ஒரு பெரியாரின் பெயரில் இயங்கி வரும் இப்படிப்பகம் இப்பகுதி மக்களின் கலை, கலாச்சார, விளையாட்டுத் துறைகளில் அதிக சேவையாற்றி வருவதை பாராட்டாமலிருக்கமுடியாது".

இவ்வாறு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. பி. ஜெகநாதன் மாதகல் விபுலானந்தர் படிப்பகத்தின் நான்காவது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். படிப்பகத்தலைவர் திரு. க. சுப்பிரமணியம் தலைமையில் கடந்த ஞாயிறு இரவு நடைபெற்ற இவ்விழாவில் வலி தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. கோபாலரத்தினம் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"சன சமூக நிலையங்கள், படிப்பகங்கள் போன்றவை வெறும் பத்திரிகைகள் படிக்கும் நிலையங்களாக மாத்திரம் இயங்காமல் அப்பகுதி மக்களின் கலை, கலாச்சாரங்களைப் பேணி வளர்க்கவும், சமூக அபிவிருத்தித்திட்டங்களைச் செயல்படுத்தவும் முன்வர வேண்டும். இன்று அரசாங்கம் சனசமூக நிலையங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து நாட்டின் அபிவிருத்தியில் பங்குபற்றுவதற்கு அதிக சந்தர்ப்பங்களை அவற்றுக்கு வழங்கி வருகின்றது. இவற்றை எமது பகுதியிலுள்ள சனசமூக நிலையங்கள் தவறாது பயன்படுத்தித்தமது பகுதிகளை முன்னேற்ற முயற்சிசெய்யவேண்டும்"

யாழ்ப்பாண விவசாய விஸ்தரிப்பு ஆணையாளர் திரு. எஸ். செந்தில் நாதன் உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

இவ்விழாவில் இடம்பெற்ற மின்னொளி கரப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டி "மில்க் வைற்" வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. பெண்கள் வலைப்பந்தாட்டப்போட்டியில் இளவாலை திருக்குடும்பக் கன்னியர்மடப் பாடசாலை மாணவிகள் வெற்றிபெற்றனர். மரதன் ஓட்டப்போட்டியும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (அ)

# சிறுத்தீவில் நீரியல் ஆய்வு

[யாழ்ப்பாணம்]

நீரியல் நிலைபற்றி ஆராயும் பொருட்டு திரு. என். ஞானச்சந்திரன் தலைமையிலான குழு சிறுத்திவுக்குச் சென்றது

யாழ்ப்பாணம் எம்.பி. திரு. வி. யோகேஸ்வரனும் இக்குழுவினருடன் சென்றிருந்தார்

நீரியல் நிலை பற்றி அங்கு ஆய்வு நடத்தியபின் இக்குழு பாலைதீவுக்கு விஜயம் செய்தது.

அங்கு கலங்கரை விளக்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து மீனவர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இறங்குதுறை ஒன்றும் இங்கு அமைக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. [உ]

## பாசறை

[கம்பளை]

கனிஷ்ட 'கடேட்' டினரின் பாசறை கம்பளை சாஹிராக் கல்லூரியில் நடைபெற்றது மத்திய மாணகாணத்தைச் சேர்ந்த பத்திற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் இதில் பங்குபற்றினர். [உ]

## கதாப்பிரசங்க அரங்கேற்றம்

[யாழ்ப்பபணம்]

செல்வி ஸ்ரீமனோகரி கணேச சுந்தரனின் கதாப்பிரசங்க அரங்கேற்றம் அடுத்த மாதம் 2ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளின் அருளாசியுடன் நடைபெறவிருக்கிறது.

திரு க. சொக்கலிங்கம் [சொக்கன்] நயினை பரமேஸ்வரக் குருக்கள், நல்லை சாம்பசிவக் குருக்கள், நீர்வேலி ராஜேந்திரக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

சுவாமி பிரேமானந்தா ஜி விசேஷ விருந்தினராகக் கலந்து கொள்வார்.

செல்வி ஸ்ரீ மனோகரி கதாப்பிரசங்க வித்வான் தமிழ்மணி எஸ். கணேசசுந்தரன் தம்பதிகளின் புதல்வியாவார். [அ]

## இவருக்கு 8-ம் திகதிவரை றிமாண்ட்

[கொக்குவில்]

வெளிநாட்டில் வேலைபெற்றுத் தருவதாக ஆசைவார்த்தை கூறி இரு வாலிபர்களை கூட்டிச் சென்று கட்டுநாயக்காவிலுள்ள ஹோட்டல் ஒன்றில் தவிக்க விட்டு தலைமறைவானதாகக் கூறப்படும் உரும்பிராயைச் சேர்ந்த சதாசிவம் பொன்னம்பலம் என்பவர் யாழ் நீதிமன்றத்தில் நீதிபதி விமல் திசநாயக்கா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது பெப்ரவரி 8-ம் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார்.

## திருக்குறள் மனனப்போட்டி

[வேலணை]

வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் இந்து இளைஞர் மன்றத்தினர் நடாத்தியதேவாரதிருக்குறள் மனனப்போட்டியில் பரிசுபெற்றவர்களின் விபரங்கள் வருமாறு:

செல்வி சி சிவஞானவதி, செல்வன் ப சிவகணநாதன், செல்வன் பொ கமலநாதன், செல்வி ப அறிவழகி, செல்வி செ மஞ்சுளா

போட்டி ஏற்பாடுகளை மன்றத் தலைவர் திரு ப பாலசுப்பிரமணியம் செய்திருந்தார். மத்தியஸ்தராக திரு வை. வைத்தீஸ்வர ஐயர் கடமையாற்றினார். (க)

Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
BARAKA FOR SECRET SERVICE
Next,
ONE CHANCE IN A THOUSAND

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எஸ் எஸ்.ஆர்-விஜயகுமாரி
முத்துமண்டபம்

## கூடுதல்வருமானம்

[திருகோணமலை]

சினன்வாடியிலுள்ள பிரி மா ஆலைக்கு நீர்விநியோகம் செய்வதன் மூலம் இலங்கை பெற்ரோலியம் கூட்டுஸ்தாபனம்கூடுதலான வருமானத்தை பெறுகின்றது.

இக்கூட்டு ஸ்தாபனம் சினன் வாடியிலுள்ள தனது கிளைகள் மூலம் 7 வற்ருத கிணறுகள் மூலமாக இவ்விநியோகத்தை நடத்திவருகின்றது.

ஒரு நாளைக்கு 60,000 கலன் நீரை மா ஆலை பாவிக்க வேண்டியுள்ளது மாதம் ஒன்றிற்கு 15 லட்சம் கலன் நீரை மாஆலை நிருவாகம் பெறுகின்றது [உ]

தினசரி 4 காட்சிகள் கடைசிவாரம்
ராணி எம். ஜி. ஆர். - அஞ்சலிதேவி
(யாழ் நகர்) நடித்த
சக்கரவர்த்தித் திருமகள்
(புதிய பிரதி)

REGAL ROMANIAN FILM FESTIVAL
(Jaffna) From 29-1-79 to 3-2-79
Daily at, 4-30, 7-00 & 9-30 p.m;
ROCK'N RCLL WOLF
31-1-79
"THE GREED"

மனோகரா தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்) எம். ஜி. ஆர்-பத்மினி
விக்கிரமாதித்தன்
(புதியபிரதி)

சாந்தி (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி ஆர் ... வீரப்பா ... சாவித்திரி
ம கா தே வி (புதிய பிரதி)
ALSO! SEVEN NIGHTS IN JAPAN - TRAILER

6-வது ஜனத்திரள் வாரம்
வின்ஸர் போன்: 466
தினசரி 5 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) 10-30, 1-30, 4-00, 7-00, 10-00
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

பகத்தான 2-வது மாதம்
ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா நடித்த
உயர்ந்தவர்கள்

3-வது ஜனத்திரள் வாரம்
ராஜா தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்) விஜயகுமார், ஜெயசித்திரா. நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
பயணம்

வெலிங்டன் கடைசி வாரம்
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சுஜாதா - கமலஹாசன் - சுமித்ரா
ல லி தா

லிடோ போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
(யாழ். நகர்) ஆசை அறுபதுநாள்

# 'சமய அனுஷ்டானக்கிரிசனை அருகிவருகிறதே'

## வடமாநில வித்தியாதிபதி கவலை

(பண்டதரிப்பு)

''சைவ சமயக்கிரிகைகளையும், சமய அனுஷ்டானங்களையும் கடைப்பிடிப்பவர்களின் தொகை இன்று அருகிவருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது ஆதியும் அந்தமும் இல்லாத சைவ சமயத்தை எதிர்காலத்தில் கட்டிக்காத்து வளர்க்கவேண்டியது இளம் சந்ததியினரின் பொறுப்பாகும். சைவசமய சம்பந்தமான விழாக்களுக்கு வருபவர்கள் விபூதி தரிக்காமலும் சந்தனப்பொட்டு வைக்காமலும் வருவதையும் காண்கிறோம். சைவசமயிகள் சமய அனுட்டானங்களைச் சரிவரக் கடைப்பிடித்து, சமய சீலர்களாக வாழ முற்படவேண்டும்''.

இவ்வாறு வடமாநில வித்தியாதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் அராலி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற அம்பாள் அந்தாதி வெண்பா நூல் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாகக்கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றஇவ்விழாவில் திரு. மாணிக்கவாசகர் தொடர்ந்து உரையாற்றுகையில், கூறியதாவது:

''எமது சைவ இளைஞர்கள் தமது சமயத்தைப் பற்றிய போதிய அறிவு இல்லாத நிலையில் காணப்படுகின்றனர். அண்மையில் எமது வடமாநில கல்வி அலுவலகத்தில் இடம் பெற்றதொரு நேர்முகப்பரீட்சையில் அங்கு வந்த சைவ இளைஞர்களிடம் சிலசாதாரணமான சமய சம்மந்தமான கேள்விகளை நாங்கள் கேட்ட போது அதற்கு அவர்களால் சரிவர பதில் அளிக்கமுடியாது போய்விட்டது.

இன்றைய இளைஞர்கள் எமது முன்னோர் விட்டுச் சென்ற விலை மதிக்கமுடியாத அரும் பொக்கிஷங்களாக தேவார திருவாசகங்களையும், திருப்புகழ் போன்றவற்றையும், அந்தாதிகளையும் படிக்க வேண்டும். சமயமன்றங்களும், இந்து இளைஞர் சங்கங்களும் இதற்கான ஒழுங்குகளைச் செய்துகொடுத்து ஊக்குவிக்க வேண்டியது அவசியமாகும்''

(6-ம் பக்கம் பார்க்க)

## ஆத்திரம்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டியதைப்பற்றியோ நீங்கள் எங்களுக்குக்கூறவேண்டியதில்லை. சிங்கள மந்திரிகள் சிலரை எங்கள் கட்சி செல்வாக்கிழந்துவிட்டது என்று கூறி மயக்குபவர்கள் யார் என்பது இப்பொழுதுதான் எனக்குத் தெரிகிறதென்றும் நான் அவருக்குச்சொன்னேன். ஆத்திரப்படாமல் எனதுபேச்சு ஹான்சாட்டில்வரும் படித்துப்பாரும் என்று கூறி இடையில் பேச்சை நிறுத்திவிட்டேன். தோற்கடிக்கப்பட்டவரென்று நான் பாராளுமன்றத்தில் பேசியதும் அவருக்குப் பிடிக்கவில்லை;

நான் அன்று பாராளுமன்றத்துக்குச் சென்று 'சண்' பத்திரிகையில் எனது பேச்சின் அறிக்கையினை வாசித்தபின்னரே திரு. ஜூனியர் ஜி ஜி பொன்னம்பலத்தின் அளவிறந்த ஆத்திரத்திற்குரிய காரணத்தை அறிந்தேன். ஆத்திரம் அறிவை இழக்கச்செய்யும் என்பதும் நினைவுக்கு வந்தது.

1968ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை பல்கலைக்கழகங்களில் பயின்ற-பயிலும் தமிழ் மாணவர்கள் மீதும் அவர்களைக் கற்பிக்கின்ற தமிழ் விரிவுரையாளர்கள் மீதும் வடுவையும் வசையையும் பொழிந்து பல்கலைக்கழகங்களுக்குத் தமிழ் மாணவர்கள் தொகையாகத் தெரிவு செய்யப்படுவதை தடுத்து தமிழினத்துக்குக் குழி பறிக்கும் மந்திரி திரு. சிறில் மத்தியுவுக்குக் கையாட்களாக இருக்கும் தமிழர்கள் யார் என்பதையும் பிடிப்புகையிலை பங்கீடு பற்றிய எனது கேள்விக்கு தந்த மறுமொழி கோடிட்டுக் காட்டுகிறது. இதைத்தாங்க முடியாமல் சிலர் ஆத்திரத்துடன் அலறுகிறார்கள்:

பிடிப்புகையிலை பங்கீடுபற்றி பாராளுமன்றத்தில் கேட்பதற்கு மீண்டும் ஒரு கேள்வியை அனுப்பியுள்ளேன். இது இப்பொழுது ஆத்திரப்படுபவர்களுக்கு அதிர்ச்சியையும் உண்டாக்கும். இல்லாத ஒரு கூட்டுறவுச் சங்கத்துக்கு வேறெங்கோ இருக்கும் ஒருவருடைய மாற்றுப்பெயரில் பிடிப்புகையிலை கொடுக்கப்பட்டு வருகின்றது. இதுவும் விரைவில் அம்பலப்படுத்தப்படும்.

கா. பொ. இரத்தினம்
பா. உ.

வேலணை
27-1-79

வெஸ்லி
(கரவெட்டி)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சின்னஞ் சிறுஉலகம்

## அப்போதிக்கரி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ராக இருக்கும் வாய்ப்பு எனக்குக்கிட்டியது. அக்காலத்தில் அவர் பேச்சைக்குறைத்து செயலில் கூடுதல் கவனம் செலுத்தியதை அவதானித்தேன் இவர் செயல்வல்லுநராக இருந்ததனுல்தான் சாதாரண விரிவுரையாளராய் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தவர், சிரேஷ்ட விரிவுரையாளராகி, தமிழ்த்துறைப் பேராசிரியராகி. யாழ். பல்கலைக் கழக உபவேந்தராகியுள்ளார்'' என்று கூறினர்.

கவிமணி வி. கந்தவனம் பேசுகையில் கூறியதாவது:

### கலைகளுக்குப் புத்துயிரளித்தார்

''ஆங்கிலம்அல்லது சட்டத்துறையைத்தான் இவர் கற்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்ட காலத்தில் தமிழ்மீது கொண்ட பற்றினுல் தமிழைக் கற்ருர். அதனுல் உபவேந்தர் பதவி அவரைத் தேடி வந்தது:

''சட்டமேதை சம்பந்த முதலியார் ஆங்கிலம் கற்ற பட்டதாரிகளை நாடகத்தில் நடிக்கவைத்ததால் தமிழ் நாட்டில் நாடகத்திற்கு ஒருநல்ல நிலை ஏற்பட்டது. அதே போன்று செத்துக்கொண்டிருந்த தமிழ் நாடகம், நாட்டுக்கூத்துபோன்ற இன்னேரன்ன பல கிராமியக் கலைகளைக் கௌரவித்து பல்கலைக் கழக மாணவர்களைக்கொண்டு நடிப்பித்ததன் மூலம் அக்கலைகளுக்குப் புத்துயிர் ஊட்டியுள்ளார்'

### பல்கலைக்கழகத்தில் எழுத்தாளர் உருவானகாலம்

செம்பியன் செல்வன் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது 1961க்கும் 64க்கும் இடைப்பட்ட காலம் பேராதனைப்பல்கலைக்கழகம் எழுத்தாளர்களையும் நூல்களையும் உருவாக்கிய காலம் அதே வேளை விரிவுரையாளர்களுக்குள் வேறுபாடுகள் ஏற்பட்டதால் மாணவர்களும் இரு கட்சிகளாகப் பிரிந்து நின்றனர் உபவேந்தர் வித்திக்கு மாறுபட்ட முகாமில் நானிருந்தேன் தமக்கு எதிரானவர்களையும் அவர் மதிக்கும் பண்பினை நான் அப்போது அவதானிக்கக் கூடியதாயிருந்தது'' (அ)

## இன்றைய இராசிப்பலன்

தை மாதம் 17-ந் திகதி

செவ்வாய்க்கிழமை

(30-1-79)

**மேடம்:-** ஏக்கத்தின் சாயல் நிழல்போலத் தொடரும். சிலர் வாழ்க்கையில் பிரிவுத்துயர். வேதனையைத் தரும். முற்கோபத்தினுல் கலகங்கள் தோன்றக்கூடும். ஆத்திர உணர்ச்சியை அடக்கவும்.

**இடபம்:-** பொருளாதாரத் துறையில் விருத்தி ஏற்படும். குடும்பத்தில் சுமுகமான நிலை தென்படும்.

**மிதுனம்:** இதயத்தில் அமைதி ஏற்படும். நண்பர்கள் மூலம் உற்சாகமான வரவேற்புக்கிடைக்கும் குடும்பத்திலும் பிணைப்புக்கள் பலப்படும்.

**கடகம்:-** கடமையில் தளர்ச்சி ஏற்படும். எதிரிகள் விடயத்தில் விழிப்புடன் இருக்கவும். வைத்தியச் செலவுக்கு இடமேற்படும். நிதானம் வேண்டும்.

**சிங்கம்:-** வாழ்க்கை கரும்பு போல் இனிக்கும். வாழ்க்கையில் புதிய அபிவிருத்தி தென்படும். கண்ணியம் சேரும் புத்திர வழிச்சுகமும் உண்டு.

**கன்னி-:** தொழிலும் நஷ்டம் ஏற்படும். கடன்தொல்லைகள் அதிகரிக்கும். முதலீடுகளை தவிர்ப்பதுடன் உஷாராகவிருக்கவும்.

**துலாம்:-** கைகொடுத்து உதவுவதற்கு தர்மதர் முன் வருவார். காரியச்சித்தியும் கிட்டும் தரும காரியங்களில் விருப்பு ஏற்படும். சுபதினம்.

**விருச்சிகம் :-** வியாபாரத் தொடர்புகள் பெருகும். உல்லாசப்பயணமொன்றும் மேற்கொள்ளப்படலாம். பொதுவாக தொழிலில் வெற்றியுண்டு.

**தனுசு:-** நீண்டநாள் கொடுக்கல்வாங்கல் இன்று நிவர்த்தியாகும். பெரியமனிதர்களின் ஆதரவும் பெருகும் புதிய தொழில்களை முதலீடு செய்வதற்கு உகந்ததினம்.

**மகரம்:-** சிந்தனை சிலந்தி வலை பின்னும் கடந்தகாலச் சம்பவமொன்று வேதனையைத் தரலாம். தனிமையைப் பெரிதும் விரும்புவீர்கள். நிம்மதியற்ற தினம்,

**கும்பம்:-** இனப் பூசலின் மூலம் இதயபாரம் ஏற்படும். திடீர் முடிவு ஆபத்து விளைவிக்கும். தொழிலிலும் மந்த நிலை தென்படும். சுமாரான நாள்.

**மீனம்:-** பெரியோர் வரவேற்புக் கிடைக்கும். குடும்பத்திலும் வசந்தம் நிலவும். மேடைப் பேச்சாளர்கள் பெரும் புகழ் அடைவர் நல்ல தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# ஆத்மஜோதி ஆதரவில் சமயப் பேச்சுப் போட்டி

[நாவலப்பிட்டி]

மகாசிவராத்திரி விழாவை முன்னிட்டு நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையத்தினர் மாணவர் மத்தியில் சமய உணர்வை வளர்க்கும் நோக்கமாகப்பேச்சுப் போட்டி ஒன்றை நடாத்த ஒழுங்குகள் செய்துள்ளனர்.

பாலர்பிரிவு ஆரம்பபிரிவு மத்தியபிரிவு மேற்பிரிவு என நான்கு பிரிவுகளாகப் போட்டி நடைபெறும்

இலங்கையின் எல்லாப்பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் பங்குபற்றக்கூடிய இப்போட்டிகள் அடுத்தமாதம் 18-ம் திகதி கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கின்றன.

மகாசிவராத்திரி தினத்தன்று நாவலப்பிட்டியில் பரிசில்கள் பாராட்டுப்பத்திரங்கள் வழங்கப்படும். விண்ணப்பங்களை செயலாளர் ஆத்மஜோதிநிலையம் நாவலப்பிட்டி என்ற முகவரிக்கு அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது

நாம் ஏன் பிறந்தோம்? நாவலர் காட்டிய நன்னெறி மகாசிவராத்திரி சமய வாழ்க்கை மாரியம்மன் வழிபாடு மார்கழி மாதப்பெருமை சைவம் வளர்த்த மகளிர் மலையகத்தில் சமயவளர்ச்சி சைவசமய விரதங்கள் சைவத்தொண்டாற்றிய ஒருவர் முதலான விடயங்களில் ஒன்றை சொற்பொழிவுக்குத் தெரிவுசெய்யுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

# ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

வசாவிளானைச் சேர்ந்த பி. சுப்பிரமணியம் என்பவர் கத்திக்குத்துக் காயத்துடன் யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திவரும் காங்கேசன்துறைப் பொலிசார் சந்தேகத்தின்பேரில் என். கந்தசாமி என்பவரைத் தேடி வருகின்றனர். (உ)

# 5-வது கிரிக்கெட் டெஸ்ட்

# வெற்றிதோல்வியில்லை; 6-வது டெஸ்ட் 2-ம் திகதி

[புதுடில்லி]

இந்திய-மேற்கிந்திய 5-வது கிரிக்கெட் டெஸ்ட் நேற்று வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

மூன்று தினங்கள் வரை சிறப்பாக நடைபெற்ற கிரிக்கெட் டெஸ்ட் கடைசி இரண்டு நாட்களிலும் கடும் மழை காரணமாக மொத்தம் ஏழரை மணிநேரம் மட்டுமே நடந்தது.

நேற்று நண்பகலுக்குப் பின்னர் ஆட்டத்தைத் தொடர்ந்த மேற்கிந்தியா ஆட்டநேர இறுதிவரை 3 விக்கட்டுகள் இழப்புக்கு 179 ஓட்டங்கள் எடுத்தது. காலிச்சரன் 45 ஓட்டங்களும், மறே 07 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருந்தனர்

இந்திய ஆட்டக்காரர் கப்பில்தேவ் இந்த கிரிக்கெட் டெஸ்டில் சிறப்பாட்டக்காரராகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஆறுவது [இறுதி] கிரிக்கெட் டெஸ்ட் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கான்பூரில் நடைபெறும்.

# வீதிகளைப் பார்வையிடுவர்

(நெல்லியடி)

உடுப்பிட்டித் தொகுதியில் உள்ளநெடுஞ்சாலைகள் அமைச்சிற்குப்பொறுப்பான வீதிகளை இன்று செவ்வாய்க்கிழமை உடுப்பிட்டி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. த. இராசலிங்கமும், பளையிலுள்ள நெடுஞ்சாலைகள் அமைச்சின் நிறைவேற்றுப் பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு. எஸ். கந்தசாமித்துரை ஆகியோரும் சென்று பார்வையிடவுள்ளார்கள்.

இவ்வீதிகளின் நிலைமைகள் அவதானிக்கப்பட்டு பன்முகப் படுத்தபபட்ட நிதியில் ஒதுக்கீடு செய்யபபட்டவற்றில் மாற்றங்கள் சில ஏற்படுத்தப்படும் என அறியபபடுகின்றது.

## யாருடையது?

மின்சார நிலைய வீதிச் சந்தியில் கண்டெடுத்த தண்ணீர்க்குழாய் தொடர்பான பாகம் ஒன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் தாவடியைச் சேர்ந்த கணேசரத்தினம் என்பவரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

# பீடிப்புகையிலை விவகாரம்: பண்டிதரின் கேள்விகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் முறையே செயலாற்றப்பணிப்பாளர் திரு. கே கணேசலிங்கத்தின் சிபார்சிலும், திரு ஜி. ஜி. பொன்னம்பலம் [ஜூனியர்] சிபார்சின் பேரிலும் மொத்தமாக கொடுக்கப்பட்ட பீடிப்புகையிலை எவ்வளவு?

பாராளுமன்றத்தில், கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சரிடம் பெப்ரவரி 23-ந் திகதி மேற்கண்ட கேள்வியை கேட்க ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

அன்றையதினம் கீழ்க்காணும் கேள்வியையும் கேட்கவிருக்கின்றார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் தொகுதி ஒவ்வொன்றிலும் பீடிப்புகையிலைப் பங்கீடு பற்றி ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினர் கேட்ட கேள்விக்கு 23-11-78ல் கொடுக்கப்பட்ட மறுமொழியில் ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை, மானிப்பாய், கோப்பாய், யாழ்ப்பாணம் ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர்களின் சிபார்சில் பீடிப்புகையிலை கொடுக்கப்பட்டதென்று கூறப்பட்டுள்ளதனை அறிவாரா?

இந்த ஐந்து ஐ. தே. க. பிரதம அமைப்பாளர்களின் பெயரைக் கூறுவாரா?

ஆயிரம் ருத்தலுக்கு மேலாக புதிய ஒதுக்கீடுபெற்ற தனிப்பட்டவர்களின் பெயர்களையும் இவர்களுக்குக் கொடுக்கக் காரணத்தையும் கூறுவாரா?

இவர்கள் எல்லோருக்கும் கொடுக்கப்படும் புகையிலையை அறுநூறு ருத்தலாக குறைத்துக் கொடுப்பதற்கும் மிகுதியை ப. நோ. கூ. சங்கங்களுக்குகொடுப்பதற்கும் உடன் நடவடிக்கை எடுப்பாரா? அன்றேல் ஏன்?.

# தாலிகட்டும்வேளை

## மாயமானாராம் மணமகள்

[வேலணை]

தாலிகட்டுவதற்குமணமகன் அழைத்துவரப்பட்ட சமயம் மணமகள் திடீரெனக் காணமல் போயவிட்டாராம்.

பிரஸ்தாப மணமகள் தமது காதலனுடன் ஓடியதாகப் பின்னர் தெரிய வந்ததாம்.

புங்குடுதீவில் நடைபெற்றதாகக் கூறப்படும் இச்சம்பவம் குறித்து ஊர்காவற்றுறைப் பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் கூறப்படுவதாவது; மணமகளின் பெற்றோர் கல்யாணம் பேசி முகூர்த்தமும் வைக்கப்பட்டதாம்

மணமகன் அழைத்துவரப்பட்டவேளை மணமகளைக்காணவில்லையாம் தம் பெற்றோருக்குத் தெரியாமல் காதலித்து வந்த ஒரு வாலிபருடன் இவர் ஓடிவிட்டதாகத் தெரியவந்ததாம்.

இது பற்றி பெற்றோர் செய்துகொண்ட புகாரையடுத்து பொலிசார்பிரஸ்தாப யுவதியையும் வாலிபரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

யுவதிக்கு 15 வயது 4மாதங்கள் என்றும் வாலிபருக்கு 24 வயதென்றும் விசாரணையில் தெரியவந்ததாம்.

அடுத்தமாதம் 8ம் திகதி வரை யுவதிஇரட்சணியசேனை முகாமிலும் வாலிபர் மேற்படி திகதிவரை விளக்கமறியலிலும் வைக்கப்பட்டுள்ளனர். [உ]

## அரியாலை கொலை வழக்கு:

# எதிரிக்கு 5 வருடம்

## ஒத்திவைக்கப்பட்ட கடுழியம்

### விதவைக்கு நஷ்டஈடாக ரூ. 7,200 வழங்கவும் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

மைத்துனரைக் கைமோசக் கொலைபுரிந்ததான, அரியாலை கொலை வழக்கில் எதிரிக்கு 5 வருடம் ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடுழிய சிறைத் தண்டனை கிடைத்தது.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜமீல் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் அரியாலையில் 77-ம் ஆண்டு மார்ச் 1-ம் திகதி குஞ்சன் விபுலானந்தனைக் கொலை செய்ததாக, கந்தையா மனோகரன் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி கே. பி. எஸ். வரதராசா, சட்டத்தரணி எஸ். சுரேந்திரன் ஆகியோர் ஆஜரானார்கள், அரசதரப்பில் சட்டத்தரணி எஸ். ஸ்ரீரஞ்சன் வழக்கை நடத்தினார்.

எதிரி கைமோசக் கொலைக் குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

முன்பு வியாபாரம் செய்ததாகவும், தற்போது கூலி வேலைசெய்வதாகவும், நாளொன்றுக்கு 13 ரூபா சம்பளமென்றும், மாதம் 250 ரூபா சம்பளம் பெற முடியுமென்றும், நீதிபதியின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் எதிரி கூறினார்.

தனக்கு 3 பிள்ளைகள் உண்டென்றும் கூலிவேலை செய்து சீவியம் நடத்துவதாகவும், இறந்தவரின் மனைவியான பஞ்சரத்தினம் கூறினார்.

நீதிபதி தீர்ப்பளிக்கையில், முன்பு குற்றம் எதுவும் செய்யாததினால் 5 வருடம் ஒத்திவைக்கப்பட்ட 2 வருடகடுழிய சிறைத் தண்டனை விதிப்பதாகவும், 7200 ரூபா நஷ்டஈடு வழங்க வேண்டுமென்றும் 300 ரூபா அபராதம் செலுத்தவேண்டுமென்றும் தீர்ப்பளித்தார்.

7200 ரூபாவையும் மாதம் 120 ரூபாவீதம் 5 வருடங்களுக்கு கோர்ட்டில் கட்ட வேண்டுமென்றும் பணம் கட்டத்தவறினால் 18 மாத கடுழிய சிறைத்தண்டனையென்றும் தீர்ப்பில் தெரிவித்தார்.

முதல் தவணைப் பணத்தை பெப்ரவரி 28-ம் திகதி கட்ட வேண்டுமென்றும் கூறினார்.

நஷ்டஈடு பணம் 7200 ரூபாவையும், கோட்டில் சேரவிட்டு, பிள்ளைகளின் நன்மைக்காக கடைசியில் எடுக்குமாறு நீதிபதி தெரிவித்த ஆலோசனைக்கு இறந்தவரின் மனைவி சம்மதித்தார். (ச)


**தற்காலிக உடற்பயிற்சி ஆசிரியை**

வலைப்பந்து, எறிபந்து ஆகியவற்றில் பயிற்சி அளிக்கக் கூடிய, உடற்பயிற்சித் தராதரமுடைய ஆசிரியை உரும்பராய் இந்துக் கல்லூரிக்கு உடனே தேவை. 7-2-79க்கு முன் அதிபர், இந்துக்கல்லூரி, உரும்பராய் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்குக

30-01-79. 1484 அதிபர்.


# 'ஓசி'ப் பயணம் செய்தனராம்

[கொக்குவில்]

ரபிலில் டிக்கட் இன்றி ஓசிப் பிரயாணம் செய்த இருவர் டிக்கட் பரிசோதகர்களிடம் மாட்டிக்கொண்டனராம்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்த மெயில் வண்டியில் டிக்கட் இல்லாது பிரயாணம் செய்ததாகத் தென்னிலங்கை வாசிகளான கே. முத்துபண்டா, எம். தேவபாலன் ஆகிய இருவரையும் மாங்குளத்தில் வைத்துடிக்கட் பரிசோதகர்கள் கைது செய்துள்ளனர்.

டிக்கட் பரிசோதகர்களால் கைது செய்யப்பட்ட இவ் இருவரும் யாழ் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். [அ]

## சமய...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றார்.

இவ்விழாவில் அந்தாதி வெண்பா நூல் ஆசிரியரான திரு. த. கந்தசாமி விழாவுக்கு தலைமை வகித்த வட்டுக்கோட்டை எம். பி. யினால் பாராட்டப்பட்டார் இவ் விழாவில் யாழ்ப்பாண பல்கலைக்கழக சரித்திரவிரிவுரையாளர் திரு. க. சிற்றம்பலம், பண்டிதர் ப. இராசகுரு, பண்டிதர் வி. நவரத்தினம், திரு. நாக. பத்மநாதன், திருமதி பொன்மலர் சிவானந்தன் உட்படப் பலர்உரையாற்றினார்கள். [உ]

## அதிவேகத்தை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஓட்டுதல், புகைபிடித்தபடி கார் ஓட்டல்போன்றவைகளாலும் விபத்துக்கள் நேரிடுகின்றன, கார் ஓட்டுபவர்கள் நல்ல நிலையிலுள்ள ரயர்களை பாவிப்பதாலும் மாரிகாலங்களில் கண்ணாடிகளைச் சுத்தப்படுத்தும் வைப்பர்களைப் பாவிப்பதனாலும் விபத்துக்களை தவிர்க்கமுடியும் என்று கூறினார். [கொக்; நிரு.]

## ஈரான் ......

[1ம் பக்கத் தொடர்ச்சி]

என்ற சொல்லு வர்ணஜாலமாகிவிட்டது. போதிய உணவை மக்களுக்கு வழங்குவோம் என்று கூறி மக்களுககு போதிய உணவை வழங்குகிறார்களில்லை. மகாவலியை 5 வருடங்களில் திசைதிருப்புவோம் என்று கூறினார்கள். ஆனால் 25 வருடங்களானாலும் இவர்களால் மகாவலியை திசைதிருப்பமுடியாது. அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்கிறோம் என்று கூறித்திரிகிறார்கள், இந்தோனேஷியாவுக்கு ஏற்றுமதி செய்த அரிசி அந்த நாட்டின் மிருக உணவுக்கு பயன்படுத்தபபடுகிறது'' என்றும் குறிப்பிட்டார். [ம]

## பெப். 12-ல் காங்கிரஸ் வழக்கு

[யாழ்ப்பாணம்]

தமிழ்க் காங்கிரஸ் வழக்கு பெப்ரவரி 12-ந் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளது.

இவ்வழக்கு யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஆசீர்வாதம் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது விசாரணை பின்போடப்பட்டது. (ச-அ)

## இன்று

[யாழ்ப்பாணம்]

காரைநகர் சைவமகாசபை மண்டபத்தில் இன்று சர்வோதய தினவிழா நடைபெறவுள்ளது.

சர்வோதயத் தலைவர் திரு. வே. அம்பலம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மெய்யியல் துறைத் தலைவர் கலாநிதி வே. இராமகிருஷ்ணன் டாக்டர் ஆ. தர்மலிங்கம், திரு. ச. சபாபதி ஆகியோர் உரையாற்றுவர்.

[உருத். நிரு.]

## ''வாழும்போதே பாராட்டத் தவறிவிட்டோம்''

[யாழ்ப்பாணம்]

''கலைத்தாயின் தவப் புதல்வன் ஸ்ரீசங்கரின் திடீர்மறைவு மக்களையெல்லாம் துயரக் கடலில் ஆழ்த்திவிட்டது. இத்தனை இளமையில் அவரைக் காலன் கவர்ந்து சென்றது நாம் செய்த தவக்குறைவே. வாழும்போதேஅவரைப் பாராட்டத் தவறிவிட்டோம்''

இவ்வாறு ஆவரங்கால் சர்வோதய சனசமூக நிலையத்தினரால் அமரர் ஸ்ரீசங்கர் குடும்பத்திற்குஅனுப்பப்பட்ட அனுதாபச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது. [சு]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 6[illegible]-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு தைமாதம் 30-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General PostOffice The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389, Registered as a News paper in Sri Lanka.